**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**CC. No. 23 /2022**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **கவிதா** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : சுப்பையா | கணவர் பெயர் | : கரியசாமி |
| கிராமம் | : மன்றவயல் | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 44/2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.08.2024 |

**( எதிரி நளினி ஆஜரில் உள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் மன்றவயலில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி பகல் 1 மணியளவில் நாங்கள் மன்றவாயிலில் எங்கள் வீட்டின் முதல் தளம் கட்டிக்கொண்டிருந்தோம் . அதற்கு மண் வேண்டி எங்கள் ஊர் கேணியில் இருந்து நானும் , எனது அக்கா மாலா இருவரும் மண் கொண்டுவந்து கொண்டிருந்தோம் . அங்கு வந்த ஆஜர் எதிரி அவரது கணவரை நான் வைத்திருப்பதாக கூறி என்னை தேவிடியா என்று அசிங்கமான வார்த்தை பேசி தண்ணீர் இரும்பு வாளியால் எனது இடது பக்க மூக்கின் மீது அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார். நான் உடனே மயக்கமடைந்து விழுந்துவிட்டேன். என்னை எனது அக்கா மாலா மற்றும் அண்ணன் தேரடி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். சுமார் 8 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு காயம்பட்ட இடத்தில் 3 தையல் போட்டார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் என்னை விசாரித்து நான் சொன்ன விபரத்தை எழுதிக்கொண்டார்கள் . என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் . **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த சமயம் எனது அக்கா மாலா என்பவரும் என்னுடன் தான் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த அன்று நாங்கள் கேணி அருகே மண் எடுத்து எங்கள் வீட்டின் முதல் தளத்தை கட்டிக்கொண்டிருந்தோம் . சுமார் 18 நபர்கள் நாங்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம் . மண்ணை நானும் , எனது அக்கா மாலா என்பவர் மட்டும் தான் அள்ளிக்கொண்டிருந்தோம் . எங்கள் வீட்டிற்கும் கேணிக்கு சுமார் 500 மீட்டர் தொலைவு இருக்கும் . மருத்துவமனையில் என்னிடம் கைரேகை மட்டும் தான் வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான் . அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எங்களுக்குள் சண்டையானது கேணி அருகே தான் நடந்தது . சம்பவம் நடந்த போது கேணி அருகே ஆஜர் எதிரியின் கணவர் ஜெயராஜ் என்பவருடம் நான் பேசி கொண்டிருந்தேன் என்றால் மாலா பேசிக்கொண்டிருந்தார் நான் அவருடன் இருந்து சிரித்துக்கொண்டிருந்தேன். நான் பேசி கொண்டிருந்ததாக புகாரில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான் . எதிரி அவருடைய கணவருடன் நான் பேசக்கூடாது என்று எச்சரித்தார் என்றால் அவ்வாறு எப்போதும் சொன்னதில்லை. சம்பவம் எங்கள் வீட்டிற்கு முன்பு நடந்ததாக புகாரில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான் . சம்பவத்தின் போது எதிரி அவருடைய கணவரை என்னிடம் பேசக்கூடாது என்று சத்தம் போட்டுக்கொண்டிருந்தபோது நான் தான் ஏண்டி தேவிடியா யாரை ஜாடை மாடையாக பேசுகிறார் என்று தண்ணீர் வாளியை கொண்டு அவரை அடிக்க சென்றேன் என்றால் சரியல்ல . தண்ணீர் வாளியை பிடித்து கொண்டு இருவருக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றால் சரிதான் . தள்ளுமுள்ளின் போது வாளி இடித்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை நான் அடிக்க சென்றபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளின் போது வாளி மீது விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் , எதிரி என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல . சம்பவத்தின் போது என்னுடன் மாலா மட்டும் தான் இருந்தார் வேறு யாரும் இல்லை . இருவரும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான் , ஆஜர் எதிரி எனக்கு மகள் என்ற உறவுமுறை ஆகும் . நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M.SELVAM Digitally signed by M.SELVAM Date: 2024.08.20 21:39:29 +0530

Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC. No. 23 /2022**
**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மாலா** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : --- | கணவர் பெயர் | : நாட்ராயன் |
| கிராமம் | : மன்றவயல் | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 48/2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.08.2024 |

**( எதிரி நளினி ஆஜரில் உள்ளார்.)**

**முதல் விசாரணை :**

நான் மன்றவயலில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . அ.சா.1 யை எனக்கு தெரியும் . சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஆகஸ்ட் மாதம் 19 ம் தேதி பகல் 1 மணியளவில் நாங்கள் மன்றவாயிலில் உள்ள கிணற்றின் அருகே எங்கள் வீடு கட்டுவது சம்பந்தமாக மண் எடுப்பதற்காக சென்றோம். அங்கு வந்த ஆஜர் எதிரியின் கணவர் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார் . அப்போது ஆஜர் எதிரி சந்தேகப்பட்டு தண்ணீர் இரும்பு வாளியை கொண்டு அ .சா.1 ன் மூக்கின் மீது அடித்துவிட்டார் . அவருக்கு ரத்தம் வந்தது அவர் உடனே மயங்கிவிட்டார். பின்னர் அவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். அங்கு போலிசார் வந்து எங்களை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 கவிதா எனது நெருங்கிய உறவினர் என்றால் சரிதான் . நான் அவரை பார்க்கும்போது அ .சா.1 ற்கு அடிபட்டு காயம் ஏற்பட்டிருந்தது என்றால் சரிதான். நானும், ஆஜர் எதிரியின் கணவர் மற்றும் அ.சா.1 ம் தான் பேசிக்கொண்டிருந்தோம். எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றும் , அ.சா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . சம்பவம் கிணற்றின் அருகே

தான் நடந்தது. சம்பவம் அ.சா.1ன் வீட்டின் முன்பாக நடந்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான்.

M.SELVAM Digitally signed by M.SELVAM Date: 2024.08.20 21:39:36 +0530

Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**
**கொடைக்கானல்.**
**CC. No. 23 /2022**
**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **தேரடி** | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : பொன்னையா | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : மன்றவயல் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2024 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 20.08.2024 |

**( எதிரி நளினி ஆஜரில் உள்ளார்.)**
**முதல் விசாரணை :**

நான் மன்றவயலில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் . அ.சா.1 மற்றும் அ .சா.2 யை எனக்கு தெரியும். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை , நான் மாலை 6 மணிக்கு வீட்டிற்கு வந்தேன் அப்போது ஆஜர் எதிரியும் அ.சா.1 கவிதாவும் சண்டை போட்டுக்கொண்டதாக ஊரில் இருந்தவர்கள் பேசினார்கள். மறுநாள் காலை என் தங்கை அ .சா.1 யை நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். அ.சா.1 னிடம் கேட்ட போது ஆஜர் எதிரி தண்ணீர் வாளியால் அடித்துவிட்டார் என்று என்னிடம் தெரிவித்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் . கவிதா சொல்லியதை வைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான் . நான் வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Magistate No.I,
Kodaikanal.